**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 46/2020**

**Date : 28.01.2026.**

**பி.வா.சா.1 - முருகன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி.**

நான் தற்போது SLR ஆவணத்தை கொண்டு வந்துள்ளேனா என்றால் ஆம் கொண்டு வந்துள்ளேன். **மேற்படி SLR நகல் ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பட்டிகை சொத்து நிலவியல் பாதை என்று குறிப்பிடப்படுவதற்கு முன்பு பட்டாதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அந்த விபரம் கோப்பில் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண் என்ன என்றால் 3208/1 pt. சர்வே எண். 3208/1 pt யார் பெயரில் உள்ளது என்றால் சாஸ்தான்கோவில் விளை, கிருஷ்ண நாராயணநாடார், செல்லவடிவு நாடார், அனந்தகுட்டி நாடார், சிதம்பரேஸ்வர தவமணி நாடார், சென்றதிசை வென்ற பெருமாள் சுவிகாரபுத்திரன் சென்றதிசை வென்ற பெருமாள், திருச்சிற்றம்பல நாடாச்சி, அனந்தம்மாள் நாடாச்சி. ஆதியில் மேற்படி நபர்கள் பெயரில் தான் வழக்கு பட்டிகை சொத்து இருந்துள்ளது என்றால் சரிதான். அதன் பின்பு அனந்தன்குட்டி நாடார் மகள் அனந்தம்மாள் நாடாச்சி, சிதம்பரேஸ்வர சிந்தாமணிநாடார், ராஜமணிநாடார், பொன்னுசாமி மகன் அனந்தகுட்டி, சென்றதிசை வென்றபெருமாள் மகன் சென்றதிசை வென்றபெருமாள் ஆகியோர் பெயரில் மாறியுள்ளது.

மேலும், கோப்பின்படி உள்ள பதிவேண்டின்படி ஹரிகிருஷ்ணன் மகன் வைகுண்டன், மைனர் கார்டியன் தாயார் சின்னத்தங்கம் நாடாச்சி , ஹரிகிருஷ்ணன் மகன் சின்னதங்கம் ஆகியோர் பெயர்சுளிக்கப்பட்டு பூஸ்திதிபாதை என்று ஆக்கப்பட்டது. மேற்படி பூஸ்திதிபாதை என்று போடப்பட்டதற்கும் அதனை காட்டுவதற்கும் Proceedings உள்ளதா என்றால் 15.09.1973 என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் மற்ற விபரங்கள் தெளிவாக இல்லை. மேற்படி 15.09.1973 தேதிக்கு நேராக மேல் சில பெயர்கள் எழுதப்பட்டு சுழிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.09.1973 என்ன விபரம் எதற்காக போடப்பட்டது என்ற விபரம் தெரியாது என்றால் ஆணையாக இருக்கலாம் தெளிவாக இல்லை. நான் கொண்டு வந்துள்ள SLR ஆவணத்தை பார்த்தால் 15.09.1973 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணை எதற்கானது என்பது குறித்து தெரியவராது என்றால் தெளிவாக இல்லை என்பதால் மேற்படி விபரம் எனக்கு தெரியாது. மேற்படி SLR ல் ஏரியா, பரப்பளவு எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 0.58.5 ஹெக்டர். அதற்கு நேராக 1.44 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்ன விபரம் என்றால் தெரியவில்லை.

மேலும் 1.98.50 என்ற பரப்பளவு எதனை குறிப்பிடுகிறது என்றால் சர்வே எண்.273 ன் மொத்த பரப்பளவு. பூஸ்திதி பாதை என்று குறிப்பிட்டது யார் என்றால் அதன் விபரம் கோப்பில் துலங்காது. தனிநபர் பட்டாவில் இருந்து பூஸ்திதி பாதை என்று மாற்றப்பட வேண்டும் என்றால் பட்டாவில் உள்ள அனைத்து நபர்களுக்கும் அறிவிப்பு கொடுத்து அதன் பிற்பாடு தான் மாற்றப்பட வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வழக்கில் உள்ள சர்வே எண் கொண்ட பட்டாதாரருக்கு அறிவிப்பு கொடுத்ததற்கான ஆவணம் உள்ளதா

என்றால் கோப்பில் இ ல்லை. பூஸ்திதி பாதை என்று எந்த ஆண்டு, மாதம், தேதியில் போடப்பட்டது என்றால் 15.09.1973 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவணத்திற்கு முரணாக நான் அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. 15.09.1973 ல் போடப்பட்ட Proceeding எண் என்ன என்றால் தெளிவாக இல்லை.

ஏதாவது அரசு ஆவணத்தில் திருத்தம் செய்யப்பட்டாலோ, சுளிக்கப்பட்டாலோ அதிகாரியின் கையொப்பமிட வேண்டும் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.4 சுளிக்கப்பட்ட இடத்தில் அவ்வாறு கையொப்பம் இல்லை என்றால் சரிதான். மேலும் பி.வா.சா.ஆ.4 ல் சில பெயர்கள் சுளிக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சுளிக்கப்படாததன் அர்த்தம் என்ன என்றால் விடுபட்டிருக்கலாம். தற்போது வரையிலும் சில பெயர்கள் சுளிக்கப்படாமல் தான் உள்ளது என்றால் சரிதான். பூஸ்திதிபாதை என்று போடப்பட்டது அதிகாரியால் போடப்படாமல் வேண்டுமென்றே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது அது வாதிகளையோ வழக்கு பட்டிகை சொத்து பட்டாதரரையோ கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அ.வ.எண். 378/2005 வழக்கின் 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய பதிலறிவிப்பை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி அ.வ.எண். 378/2005 வழக்கில் நாங்கள் Exparte ஆகிவிட்டோம் அதனை ரத்து செய்ய கோரி ஏதேனும் மனு தாக்கல் செய்தோமா என்றால் மேற்படி விபரம் கோப்பில் இல்லை.

CRP.MD.No.165/2009 வழக்கு எதை பற்றிய வழக்கு அதன் தர்க்கம் என்ன என்பது குறித்த விபரம் இவ்வழக்கில் கூறப்படவில்லை அதற்கான ஆவணமும் சமர்ப்பிக்கவில்லை

என்றால் சரிதான். அரசுக்கு உரிமைப்பட்ட புதியபுல எண்.273/17 பொதுபாதையானது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளதை காட்டுவதற்கு அரசுக்கு உரிமை என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பூஸ்திதி நிலம் என்று இருப்பதால் அதில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது என்பதற்காக பி.வா.சா.ஆ.4 SLR நகல் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.4 ல் பூஸ்திதி பாதை என்று போடப்பட்டது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பட்டிகை சொத்து பொது மக்கள் பயன்பாட்டில் இருப்பதாக காட்டுவதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் பி.வா.சா.ஆ. 4 SLR ல் உள்ளது. பி.வா.சா.ஆ. 4 SLR ல் பொது மக்கள் பயன்பாட்டில் இருப்பதால் அது பூஸ்திதி பாதை என்று போடப்பட்டுள்ளது துலங்காது என்றால் சரியல்ல அனைத்து ஆவணங்களிலும் பொதுமக்கள் பயன்பாட்டில் இருப்பதாக குறிப்பிடப்பட இயலாது பூஸ்திதி என்றாலே பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்று அர்த்தம். வழக்கு பட்டிகை சொத்து பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாக ஏதேனும் மனு கொடுக்கப்பட்டதா என்றால் நிலவியல் பாதை ஆக்கிரமிப்பு என்று மனுக்கள் பொதுமக்களிடம் இருந்து வருகின்றது. எத்தனை மனுக்கள் வருகின்றது என்றால் நேற்றைய முன்தினம் இரண்டு மனுக்கள் வந்தன.

மேற்படி மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். நாளையதினம் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். யார்கைவசம் மேற்படி மனு உள்ளது என்றால் மாவட்ட ஆட்சியரிடம் கிராமசபை கூட்டத்தில் கொடுக்கப்பட்டது 26.01.2026 அன்று கொடுக்கப்பட்டு விசாரணைக்காக அலுவலகத்தில்

உள்ளது. அவ்வாறு எவ்வித மனுவும் கொடுக்கப்படவில்லை நான் அரசு அதிகாரத்தை பயன்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட மனுவின் கோப்பு எண் என்ன என்றால் நேற்று வரை எண் கொடுக்கப்படவில்லை. ஆக்கிரமிப்பை அகற்றப்பட செல்வதற்கு முன்பாக யாருக்கெல்லாம் அறிவிப்பு கொடுத்தோம் என்றால் மேற்படி விபரம் நான் கொண்டுவந்துள்ள கோப்பில் இல்லை. ஆக்கிரமிப்பு இடத்தை அளவீடு செய்வதற்கு முன்பாக யாருக்கெல்லாம் அறிவிப்பு கொடுத்தோம் என்றால் மேற்படி விபரம் நான் கொண்டுவந்துள்ள கோப்பில் இல்லை.

சர்வே எண். 273/17 ல் 0.0040 ஹெக்டேர் என்று குறிப்பிடப்பட்டது எந்த சர்வே எண் எல்லாம் அளந்து கண்டறியப்பட்டது என்றால் அந்த விபரம் கோப்பில் இல்லை நில அளவையிரிடம் கேட்டால் தான் தெரியும். நில அளவையர் மேற்படி விபரத்திற்கான ஆவணத்தை என்னிடம் தரவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து பூஸ்திதி பாதை பொதுமக்கள் பயன்படுத்திவரும் பாதை என்பதை காட்டுவதற்கு வருவாய் துறை மேனுவல் அல்லது சட்டவிதி புத்தகம் உள்ளதா என்றால் அந்த விபரம் தற்போது கொண்டுவந்துள்ள கோப்பில் இல்லை. நான் பூஸ்திதி பாதை பொதுமக்கள் பயன்படுத்தும் பாதை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் சர்வே எண்.273/17 நிலவியல் பாதை என்று குறிப்பிட்டுள்ளேன் நிலவியல் பாதையும் பூஸ்திதி பாதையும் ஒன்று என்று காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.273/17 பாதையாக பயன்படுத்தப்பட்டு அரசு அதனை பராமரித்து வருகிறது என்பதனை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா

என்றால் நான் கொண்டு வந்துள்ள கோப்பில் இல்லை. சர்வே எண்.273/17 தற்போதும் மண்தரையாக உள்ளது என்றால் சரிதான்.

நான் வருவாய் ஆவணங்களில் சர்வே எண்.273/17 நிலவியல் பாதை என்று வகைபாடு செய்துள்ளது எந்தவித முகாந்தரமும் அடிப்படை ஆவணங்களும் இல்லாமல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.273/17 அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதை காட்டுவதற்கு எந்தவித ஆவணமும் இல்லை என்றால் சரிதான். அ.வ.எண்.906/1953 வழக்கு பட்டிகை சொத்திற்கு எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொல்லியிருப்பது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கு எதிராக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் 26 ம் பக்கத்தில் 87 சென்ட் ரதவீதிக்கும் பாதைக்கும் இடப்பட்டுள்ளது அதன் பட்டா நிர்வாகியின் பெயரில் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ன் படி சர்வே எண். 273/17 ரதவீதியாக தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் 7 வது பக்கத்தில் பழைய சர்வே எண். 3208 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சர்வே எண். 273/17 அரசு நிலம் என்று கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல பூஸ்திதி பாதை என குறிப்பிடப்பட்டுள்ளதால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. பூஸ்திதி பாதை அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில தாக்கல் செய்ய இயலுமா என்றால் தற்போது இல்லை. வழக்கு பட்டிகை சொத்தில் வாதிகளுக்கும் இதர பட்டாதாரர்களுக்கும் தான் உரிமை உண்டு என்றும் அரசுக்கோ, பொதுமக்களுக்கோ வழக்கு பட்டிகை சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றால் பொதுமக்களுக்கு

உரிமை கிடையாது ஆனால் பயன்படுத்தலாம்.

பூஸ்திதி பாதை, நிலவியல் பாதை என்று வருவாய் ஆவணங்களில் வாகைபாடு செய்யப்பட்டதற்கு சொத்தின் உரிமையாளர்களுக்கு எவ்வித அறிவிப்பும் கொடுக்காமல் வகைபாடு செய்யப்பட்டதால் இவ்வழக்கு காலவரைக்கு உட்பட்டுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அறிவிப்பு கொடுக்க்பட்ட விபரம் கோப்பில் இல்லை என்பதால் சரியல்ல. அ.வ.எண்.378/2005 வழக்கின் தீர்ப்பு வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அ.வ.எண்.378/2005 நாங்கள் ஒரு வகைபாடும் இவ்வழக்கில் ஒரு வகைபாடும் எடுத்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலவரைக்கு உட்பட்டுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் உண்மையான சங்கதிகளை மறைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு பட்டிகை சொத்திற்கு எதிராக கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி முடிக்கப்படுகிறது.**